**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ஆம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ம.எண்.10/2026**

**IN**

**அசல் வழக்கு எண்.239/2011**

1. மாரிமுத்து
2. முத்தையாபாண்டி
3. சொர்ணத்தாய் ....1, 2, 3 மனுதாரர்கள்/ 1, 2, 3 பிரதிவாதிகள்

/எதிர்/

1. பொன்னுத்தாய்
2. கருப்பசாமி
3. தங்கம்
4. சாந்தி ....1 முதல் 4 எதிர்மனுதாரர்கள்/ 2 முதல் 5 வாதிகள்
5. நடராஜன்
6. முருகன் ....5, 6 எதிர்மனுதாரர்கள்/ 4, 5 பிரதிவாதிகள்
7. முருகலட்சுமி
8. கோட்டைத்தாய்
9. பேச்சியம்மாள் ....7 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/ 6 முதல் 8 பிரதிவாதிகள்

இம்மனுவானது 26.03.2026 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.D.கோட்டூர்முருகன் அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.A.ரவிசங்கர் அவர்கள் ஆஜராகியும், 5, 6 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கில் தோன்றாத் தரப்பினராக தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில்,

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:39:32 +0530

இம்மனுவை பொறுத்தும் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.R.வைரமுத்து அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on heavy terms என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on heavy terms என மேற்குறிப்பு செய்யப்பட்ட நிலையிலும், மனு மற்றும் அசல் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்தும், மனுதாரர்கள் தரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

மனுதாரர்களால் இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151–ன் கீழ், மனுதாரர்கள் கடந்த 26.09.2025 அன்று ஆஜராகததால் மனுதாரர்கள் மீது ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>1) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்:–</u>**

மனுதார்கள் அசல் வழக்கில் 1 முதல் 3 பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கினை 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் பாகப்பிரிவினை கோரி மனுதாரர்கள் மீதும், 5 முதல் 10 எதிர்மனுதாரர்கள் மீதும் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும், மேற்படி பிரதான வழக்கில் மனுதாரர்களும் இதர பிரதிவாதிகளும் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி மேல்நடத்தி வந்ததாகவும், இந்நிலையில் மேற்படி வழக்கானது கடந்த 05.06.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாக விபரம் தெரிந்ததால் மனுதாரர்கள் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்ததாகவும், அதனால் மேற்படி வழக்கு பற்றிய விபரங்கள் மனுதாரர்களுக்கு தெரியாமல் இருந்து வந்தது என்றும், மனுதாரர்கள் சிவகாசி வட்டம், சித்துராஜபுரத்தில் குடியிருந்து

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:39:38 +0530

வருவதாலும், இதர பிரதிவாதிகள் வெவ்வேறு ஊர்களில் குடியிருந்து வருவதாலும், மனுதாரர்களுக்கும் அவர்களுக்குமான தொடர்பு இல்லாமல் இருந்து வந்தது. இந்நிலையில், மனுதாரர் ஏதேட்சையாக தனது பூர்வீக கிராமமான பெருங்கோட்டூர் கிராமத்தில் கடந்த 11.03.2026 தேதியன்று சென்றபொழுது இதர பிரதிவாதிகளை சந்திக்க நேர்ந்தது என்றும், அவ்விதம் சந்தித்ததில் 3ம் மனுதாரரான சொர்ணத்தாய் என்பவர் மேற்படி வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டதாக விபரம் கூறினார் என்றும், உடனடியாக மனுதாரர்களது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி வழக்கு பற்றிய விபரத்தை கேட்டு தெரிந்ததில் மேற்படி வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அவ்விதம் கோப்பிற்கு எடுக்க தாக்கல் செய்திருந்த மனுவில் மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்க முயற்சி செய்ததில் அதற்கு மார்க்கமில்லை என்று கூறி மனுதாரர்களை பொறுத்து கடந்த 26.09.2025 அன்று பத்திரிக்கை விளம்பரம் மூலம் மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர்கள் அன்றைய தினம் 26.09.2025 அன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரர்களை பொறுத்து அன்றைய தினமே மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் தோன்றாத்தரப்பினராக கருதி 1, 2 மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக விபரம் கூறினார் என்றும், அவ்விதம் மனுதாரர்களை பொறுத்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்த விபரமும் மேற்படி 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்த மனுக்கள் குறித்தும் மனுதாரர்களுக்கு தெரியவராத காரணத்தினால் மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் 26.09.2025 அன்றோ அதற்கு முந்தைய வாய்தாக்களிலோ மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை மேல்நடத்த இயலவில்லை என்றும், ஆகையால், மனுதாரர்கள் கடந்த 26.09.2025 அன்று ஆஜராகததால் மனுதாரர்கள் மீது ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடக்கோரி இம்மனு மனுதாரர்கள் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:39:45 +0530

2) இம்மனுவின் 1 முதல் 4 மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on heavy terms என கற்றறிந்த வழக்கறிஞர்களால் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுவானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனு, அசல் வழக்கு கோப்பு மற்றும் மனுதாரர்கள் தரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) இம்மனுவானது மனுதாரர்களால், மனுதாரர்கள் கடந்த 26.09.2025 அன்று ஆஜராகததால் மனுதாரர்கள் மீது ஒருதலைபட்சமாக பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்து வழக்கினை மேல்நடத்திக்கொள்ள உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) இம்மனுவின் மனுதாரர்கள் தரப்பில், வழக்கானது கடந்த 05.06.2016 அன்று தள்ளுபடி செய்யப்பட்டு விட்டதாக விபரம் தெரிந்ததால் மனுதாரர்கள் எவ்வித மேல்நடவடிக்கையும் எடுக்காமல் இருந்து வந்ததாகவும், அதனால் மேற்படி வழக்கு பற்றிய விபரங்கள் மனுதாரர்களுக்கு தெரியாமல் இருந்து வந்தது என்றும், மனுதாரர்கள் சிவகாசி வட்டம், சித்துராஜபுரத்தில் குடியிருந்து வருவதாலும், இதர பிரதிவாதிகள் வெவ்வேறு ஊர்களில் குடியிருந்து வருவதாலும், மனுதாரர்களுக்கும் அவர்களுக்குமான தொடர்பு இல்லாமல் இருந்து வந்தது. இந்நிலையில், மனுதாரர் ஏதேட்சையாக தனது பூர்வீக கிராமமான பெருங்கோட்டூர் கிராமத்தில் கடந்த 11.03.2026 தேதியன்று சென்றபொழுது இதர பிரதிவாதிகளை சந்திக்க நேர்ந்தது என்றும்,

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:39:53 +0530

அவ்விதம் சந்தித்ததில் 3ம் மனுதாரரான சொர்ணத்தாய் என்பவர் மேற்படி வழக்கு மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டதாக விபரம் கூறினார் என்றும், உடனடியாக மனுதாரர்களது வழக்கறிஞரை சந்தித்து மேற்படி வழக்கு பற்றிய விபரத்தை கேட்டு தெரிந்ததில் மேற்படி வழக்கானது மீண்டும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அவ்விதம் கோப்பிற்கு எடுக்க தாக்கல் செய்திருந்த மனுவில் மனுதாரர்களுக்கு அறிவிப்பு கொடுக்க முயற்சி செய்ததில் அதற்கு மார்க்கமில்லை என்று கூறி மனுதாரர்களை பொறுத்து கடந்த 26.09.2025 அன்று பத்திரிக்கை விளம்பரம் மூலம் மனுதாரர்களுக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதாகவும், ஆனால் மனுதாரர்கள் அன்றைய தினம் 26.09.2025 அன்ற இந்நீதிமன்றத்தில் ஆஜராகாத காரணத்தினால் மனுதாரர்களை பொறுத்து அன்றைய தினமே மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் தோன்றாத்தரப்பினராக கருதி 1, 2 மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக விபரம் கூறினார் என்றும், அவ்விதம் மனுதாரர்களை பொறுத்து பத்திரிக்கையில் விளம்பரம் செய்த விபரமும் மேற்படி 1 முதல் 4 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்த மனுக்கள் குறித்தும் மனுதாரர்களுக்கு தெரியவராத காரணத்தினால் மனுதாரர்கள் இந்நீதிமன்றத்தில் 26.09.2025 அன்றோ அதற்கு முந்தைய வாய்தாக்களிலோ மனுதாரர்களால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வழக்கை மேல்நடத்த இயலவில்லை என்று காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

7) ஆனால், மனுதாரர்கள் தரப்பில் மேற்படி காரணத்தை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித சாட்சிய, சான்றாவணங்களும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

ALIMA M Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:40:00 +0530

8) இருப்பினும், அசல் வழக்கில் முழுமையான நீதிமுறை தீர்மானிப்பிற்கு அசல் வழக்கில் மனுதாரர்கள் தரப்பில் ஆஜராகி தனது தரப்பு வழக்கை எடுத்துரைக்க வாய்ப்பு வழங்கப்பட வேண்டியது அவசியம் என்பதாலும், மேலும், 1 முதல் 4 மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இம்மனுவிற்கு No Counter allowed on heavy terms என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளதாலும், இம்மனுவானது நீதியின் நலன் கருதி செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு இம்மனுவிற்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

<u>9) இறுதியாக</u>

இம்மனுவானது ரூ.1000/- (ரூபாய் ஆயிரம் மட்டும்) நிபந்தனை செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர்கள் மேற்படி தொகையினை 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/-ம் மற்றும் 7 முதல் 9 எதிர்மனுதாரர்களுக்கு ரூ.500/-ம் (மொத்தம் ரூ.1000/-) நேரடியாக 11.04.2026 ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 11.04.2026.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 07 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:40:07 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**<u>இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் </u>:–**

**– இல்லை –**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2026.04.07 18:40:14 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

**மு.மா.உ. நீதிமன்றம்,**
**சங்கரன்கோவில்,**
I.A.No.10/2026
in
O.S.No.239/2011
**உத்தரவு (Draft / Fair)**

**நாள் : 07.04.2026**